(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர் )

**இல. 57.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2019 மே 07 செவ்வாய்க்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

4/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) கூரகல தொல்பொருளியல் இடத்தைப் பேணிப்பாதுகாப்பதற்காக அரசாங்கம் இதுவரையில் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

132/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பதுளை மாவட்டத்தில் "லுணுகல பேசம்வல" எனும் பெயரில் சுற்றுலாத் துறையின் கவனத்தை ஈட்டிக்கொண்டுள்ள பிரதேசமொன்று இருக்கின்றதென்பதையும்;

(ii) மேற்படி இடமும் அவ்விடத்தைச் சுற்றி அமைந்துள்ள பிரதேசமும் பாரிய சூழல் மாசடைதலுக்கு உள்ளாகியுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி இடத்தில் நடைபெறும் சுற்றாடல் மாசடைதலை குறைப்பதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

206/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு சட்டம் மூலம் மீள்நிரப்பு மதிப்பீடுகள் மற்றும் வேறு மேலதிக நிதி ஒதுக்கங்கள் மூலம் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கங்களிலிருந்து வெவ்வேறாக யாவை;

(ii) 2017 ஆம் ஆண்டு அந்த அமைச்சினால் செலவிடப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு;

(iii) இது ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஒதுக்கங்களிலிருந்து எத்தனை வீதம்;

(iv) மீதியாகவுள்ள நிதி ஏற்பாடுகள் எவ்வளவு;

(v) இது ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஒதுக்கங்களிலிருந்து எத்தனை வீதம்;

என்பதை அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

4.

319/ '18

கௌரவ சிசிர ஜயகொடி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டு உயிரியல் பாடத் துறையில் க.பொ.த. (உயர் தரம்) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு புதிய பாடத்திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) ஒரு வருட காலம் கடந்துள்ளபோதிலும் இதுவரை 5 அலகுகளைக் கொண்ட பாடத்திட்டம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) அவைகூட ஆங்கில மொழியில் மட்டுமே வழங்கப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) புதிய பாடத்திட்டத்திற்காக நடைமுறைப் பரிசோதனைகள் மற்றும் ஆசிரியர் கையேடுகள் வழங்கப்படவில்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும்போது ஆசிரியர்களுக்கு ஆசிரியர் பயிற்சி மற்றும் புதிய பாடத்திட்டம் பற்றிய விழிப்பூட்டல் வழங்கப்பட்டதா என்பதையும்;

(ii) இன்றேல், அது ஏன் என்பதையும்;

(iii) முழுப் பாடத்திட்டத்தையும் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் என்?

5.

428/ '19

கௌரவ கனக ஹேரத்,— தபால் சேவைகள், முஸ்லிம் சமய விவகார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் கடிதங்களுக்கான தபால் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தொகை யாதென்பதையும்;

(iii) மேற்படி தபால் கட்டண அதிகரிப்பு தொடர்பாக பொது மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி அறிவுறுத்தல் மேற்கொள்ளப்பட்ட விதம் மற்றும் ஊடகம் யாது என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

480/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின், தலைமையகம் இயங்குகின்ற கட்டடத்தின் பங்குகள் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள அரச நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(ii) அக் கட்டடத்தில் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள சதுர அடியின் அளவு, குத்தகை காலம் மற்றும் குத்தகைத் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்கள் ஏற்புடைய குத்தகைக் காலத்துக்கு அறவிடப்பட வேண்டிய தொகையினை முழுமையாக செலுத்தி முடித்துள்ளனவா என்பதையும்;

(iv) இன்றேல், அது தொடர்பாக மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

510/ '19

கௌரவ விமலவீர திசாநாயக்க,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இயங்குகின்ற மற்றும் கலைக்கப்பட்டுள்ள மாகாணசபை உறுப்பினர்களில் சிலருக்கு சலுகை அடிப்படையிலான வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி பத்திரம் வழங்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) எனினும், தற்போது இயங்குகின்ற மற்றும் கலைக்கப்பட்டுள்ள மாகாணசபைகளின் பதவி வகிக்கின்ற மற்றும் பதவி வகிக்காத உறுப்பினர்களின் சிலருக்கு மேற்படி வரி சலுகையுள்ள வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதையும்;

(iii) இதுவரை பதவி வகிக்கின்ற அல்லது பதவி வகிக்காத உறுப்பினர்களில் சிலர் தொடர்ந்து ஐந்து வருட காலம் பதவி வகித்திருப்பதோடு அதில் அதிக பட்சமானவர்கள் தற்போது கலைக்கப்பட்டுள்ள மாகாண சபைகளின் உறுப்பினர்கள் ஆவர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இதற்கமைய, மாகாண சபை உறுப்பினர்களின் ஒரு பகுதியினர் வரிச் சலுகை அடிப்படையிலான வாகன அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கையில் அவ்வனைத்து தகைமைகளையும் பூர்த்திச்செய்துள்ள வேறு உறுப்பினர் சிலருக்கு மேற்படி அனுமதிப்பத்திரம் வழங்கப்படாமை பாரிய அநீதி என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வாகன இறக்குமதி அனுமதி பத்திரம் இதுவரை கிடைக்கப்பெறாத மாகாணசபை உறுப்பினர்களுக்கு மேற்படி அனுமதி பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

517/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 ஆம் ஆண்டின் முதலாவது போகத்தின் போது மேல் மாகாணத்தில் பயிர் செய்யப்பட்ட மொத்த வயற் காணிகளின் அளவு ஹெக்ரயார்களில் எவ்வளவு என்பதையும்;

(ii) மேல் மாகாணத்தில் பயிர் செய்யாது தரிசுநிலமாக உள்ள வயற் காணிகளின் அளவு ஹெக்ரயார்களில் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி பயிர் செய்யப்படாத தரிசுநிலமாகவுள்ள வயல்களினால் நாடு இழந்துள்ள நெல் மெற்றிக் தொன்கள் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பயிர் செய்யப்பட்ட போதிலும் சேதமடைந்த வயலின் அளவு ஹெக்ரயார்களில் எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி சேதங்கள் மீண்டும் ஏற்படாதிருப்பதற்கு/குறைப்பதற்கு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) பயிர்செய்கை சேதமடைந்ததன் காரணமாக அநாதரவாகியுள்ள கமக்காரர்களுக்கு இழப்பீடு வழங்கப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) பயிர் செய்யப்படாத வயல்களை வேறு பொருளாதார நடவடிக்கைக்குப் பயன்படுத்திக் கொள்ள அங்கீகாரம் வழங்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அது பற்றிய சாத்தியக்கூறுக் கற்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி கற்கையின் உள்ளடக்கம் யாது என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

9.

544/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பிடவைக் கைத்தொழில் கூட்டுத்தாபத்திற்கு உரித்தானதாகக் காணப்பட்ட துல்ஹிரிய பிடவைத் தொழில்சாலை முதலில் பொம்பே ரெக்ஸ் நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்பட்டது என்பதையும்;

(ii) பின்னர் மேற்படி கம்பனியினால் இது கொரியக் கம்பனியொன்றான காபூல் லங்கா நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்பட்டது என்பதையும்;

(iii) காபூல் லங்கா கம்பனியினால் இது வாஸ் கோல்டன் நிறுவனத்திடம் பொறுப்பளிக்கப்பட்ட போது ஊழியர்களுக்கு பணிக்கொடை மற்றும் நட்டஈடு செலுத்தப்பட்டது என்பதையும்;

(iv) இவ்வனைத்து சந்தர்ப்பங்களிலும் நிறுவனம் விற்பனை செய்யப்பட்டிருப்பது ஊழியர்கள் மற்றும் அவர்களின் உரிமைகள் உட்படவாகும் என்பதையும்;

(v) அச்சந்தர்ப்பத்தில் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களில் வசித்துவந்த ஊழியர்களுக்கு, எந்தவொரு தொகையும் செலுத்தப்படவில்லை என்பதையும்;

(vi) இலங்கை முதலீட்டுச் சபை தற்போது இந்த வாசஸ்தலங்களில் வசித்துவருகின்ற ஆட்களை அகற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) சேவையிலிருந்து ஓய்வுபெறும் போது அல்லது சேவையிலிருந்து நீக்கும் போது இந்த ஊழியர்களுக்குச் செலுத்தப்படாத பணிக்கொடை மற்றும் நட்டஈட்டைச் செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களில் சுமார் 40 வருடங்கள் வசித்துவருகின்ற ஆட்களை மேற்படி வாசஸ்தலங்களிலிருந்து வெளியேற்றும் முயற்சியைத் தடுத்து வீடுகளின் உரித்தைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

598/ '18

கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை பொலன்னறுவை மாவட்டத்தில் மணல் அகழ்வு நடவடிக்கைகளுக்காக உரிமம் வழங்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி நபர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) பொலன்னறுவை மாவட்டத்தில் தற்போது மணல் தொடர்பாக ஏற்பட்டுள்ள ஏகபோக உரிமையை தடுப்பதற்காக அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

11.

625/ '18

கௌரவ ஷெஹான் சேமசிங்க,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை வரையறுக்கப்பட்ட இலங்கை பொஸ்பேட் கம்பனியின் நிறைவேற்றுப் பணிப்பாளரின் பெயர் என்ன என்பதையும்;

(ii) இவருக்குரிய உத்தியோகபூர்வ வாகனங்கள், எரிபொருள் கொடுப்பனவு, சம்பளம் மற்றும் படிகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) 2015ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை இவருக்குச் செலுத்தப்பட்டுள்ள மொத்தக் கொடுப்பனவு யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக வேறு கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், செலுத்தப்பட்டுள்ள மொத்தத் தொகை யாது என்பதையும்;

(iii) மேற்படி கொடுப்பனவுகளுக்காக யாரால் அங்கீகாரம் வழங்கப்பட்டது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

12.

697/ '19

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாவட்டத்தில் தாழ் நிலங்களை மீட்டல் நகர அபிவிருத்தி அதிகாரசபையால் தடைசெய்யப்பட்டிருப்பின், அத்தடை எந்த ஆண்டில் கொண்டு வரப்பட்டது என்பதையும்;

(ii) இன்றளவில் குறித்த தடை நீக்கப்பட்டிருப்பின், தடை நீக்கப்பட்ட ஆண்டு மற்றும் அதற்கு ஏதுவாயமைந்த காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) 2015.01.10 ஆம் திகதி தொடக்கம் இன்று வரை நகர அபிவிருத்தி அதிகாரசபை அல்லது இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் கொழும்பு மாவட்டத்தில் எத்தனை தாழ் நிலங்களை மீட்க அங்கீகாரம் அளித்துள்ளது என்பதையும்;

(iv) மேற்படி அங்கீகாரங்கள் வழங்கப்பட்டுள்ள ஆட்களின் பெயர்கள் யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

763/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மத்திய வங்கி பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய பர்பச்சுவல் டிரஷரீஸ் நிறுவனம் செலான் வங்கியில் பேணிவருவதாக கூறப்படும் மென்டிஸ் கம்பனியின் கணக்கின் ஊடாக பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் உட்பட சிலருக்கு பணம் வழங்கப்பட்டதாக நிதமும் ஊடகங்களின் செய்திகள் வெளியாவதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இதற்கு அமைவாக, பர்பச்சுவல் டிரெஸரீஸ் நிறுவனம், மென்டிஸ் கம்பனியின் பெயரில் செலான் வங்கியில் பேணிவரும் கணக்கிற்கு 2015.01.01 தொடக்கம் 2018.01.01 வரை வைப்பிலிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) இத்தொகை வைப்பிலிடப்பட்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை மற்றும் இவ்வாறு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வைப்பிலிடப்பட்ட தொகை தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) 2015.01.01 தொடக்கம் 2018.01.01 வரையான காலத்தில் மென்டிஸ் கம்பனியின் கணக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள திகதி, ஒவ்வொரு திகதியில் விடுவிக்கப்பட்டுள்ள தொகையின் அளவு மற்றும் இப்பணம் செலுத்தப்பட்ட நபர்களின் பெயர்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

14.

771/ '19

கௌரவ சாந்த பண்டார,— நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தில் உக்கிர குடிநீர் பிரச்சினை காணப்படுகின்றது என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) அதற்காக அமுல்படுத்தப்பட்டுள்ள பிரதான குடிநீர் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) பொல்கஹவெல, பொத்துஹெர, அளவ்வ நீர் கருத்திட்டங்கள் அமுல்படுத்தப் பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அதன் கீழ் உள்ளடங்கும் பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டப் பணிகளை துரிதப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

883/ '19

கௌரவ லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை அதிபர் சேவையின் III ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான வரையறுக்கப்பட்ட போட்டி பரீட்சையானது 2015 ஆம் ஆண்டு நடத்தப்பட்டுள்ளது என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டு மார்ச் 14, 15, 16, 17, 18, 19 மற்றும் 20 ஆம் திகதிகளில் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டுள்ளன என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட நபர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அடிப்படை யாதென்பதையும்;

(iv) மேற்படி நியமனங்களுக்கான பெயர்ப் பட்டியல் இச்சபைக்கு சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

(v) மேற்படி நேர்முகப் பரீட்சைகளின் மூலம் தெரிவு செய்யப்படாத விண்ணப்பதாரர்களுக்கு மேன்முறையீடுகளை சமர்ப்பிப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(vi) அதில் 43 பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதை அறிவாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேல்முறையீட்டு செய்த 1487 இலக்கமுடைய நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றிய திருமதி எஸ்.கே.கே. குணத்திலக்க இந்த நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அவர் இந்த நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படாதமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iii) தவறுதலாக நேர்முகப் பரீட்சைக்கு அவர் அழைக்கப்படவில்லை எனில் அவரை மீண்டும் நேர்முகப்பரீட்சைக்கு அழைத்து தகைமைகளை பூர்த்தி செய்திருந்தால் ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர்,— கம்பெனிகள் (திருத்தம்),— 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

2.

மாநகரங்கள் மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் (திருத்தம்),— 1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

3.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— மோட்டார் வாகனம் (திருத்தம்),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

# பிரேரணை முன்னறிவித்தல்கள்

4.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள்,— 8 ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 6.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 2.00 மணிக்கு 8(5) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளை தொழிற்படுமாக. பி.ப. 6.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

தெங்கு அபிவிருத்தி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 (4) ஆம் பிரிவின் கீழ் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 ஓகஸ்ட் 14 ஆம் திகதிய 2084/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.03.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 சனவரி 03 ஆம் திகதிய 2104/30 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.03.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 பெப்ரவரி 01 ஆம் திகதிய 2108/65 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.03.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 பெப்ரவரி 07 ஆம் திகதிய 2109/15 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.03.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 4),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 பெப்ரவரி 08 ஆம் திகதிய 2109/20 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.03.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 5),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 பெப்ரவரி 24 ஆம் திகதிய 2111/58 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.03.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 6),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 02 ஆம் திகதிய 2112/48 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.03.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

நிதி அமைச்சர்,— வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி (இல. 1),— 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 பெப்ரவரி 28 ஆம் திகதிய 2112/25 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.03.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

நிதி அமைச்சர்,— வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி (இல. 2),— 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ், சர்வதேச அரச பத்திரங்கள் வழங்குதல் தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 பெப்ரவரி 27 ஆம் திகதிய 2112/17 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.04.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

நிதி அமைச்சர்,— சுங்கக்கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— (அத்தியாயம் 235) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வைக் கட்டணங்கள் தொடர்பில் 2019.03.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2019 மார்ச் 05 ஆம் திகதிய 2113/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை )

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்,— விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 34 ஆம் பிரிவின் கீழ், தடைசெய்யப்பட்ட பொருட்களின் பட்டியல் - 2019 தொடர்பில், தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2019 பெப்புருவரி 11 ஆம் திகதிய 2110/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.04.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

கொழும்பு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையை பரஸ்பரமற்றமயமாக்கல் சட்டமூலம் — குழு ஆய்நிலை.

* 14.

இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலைய (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

பிணையங்கள் பரிவர்த்தனை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

காலவிதிப்பு (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 17.

இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 19.

தேயிலை ஆராய்ச்சி சபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 20.

அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— பாராளுமன்றத்தில் ஆகக்கூடுதலான ஆசனங்களைப் பெற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சியினால் தேசிய அரசாங்கமொன்று நிறுவப்பட்டுள்ளதால், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 46 (4) உறுப்புரையின் பிரகாரம் அமைச்சரவை அமைச்சர்களினது எண்ணிக்கை 48 ஐ விட விஞ்சாதவாறு இருத்தல் வேண்டுமெனவும், அமைச்சரவை உறுப்பினர்கள் அல்லாத அமைச்சர்களினதும் பிரதி அமைச்சர்களினதும் எண்ணிக்கை 45 ஐ விட விஞ்சாதவாறு இருத்தல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

* 21.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.1),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 25 ஆம் பிரிவின் கீழ், மதுவரி தொடர்பாக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 சனவரி 18 ஆம் திகதிய 2054/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.05.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 04/2018)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 22.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.2),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் வருடாந்த மதுபான உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2017 திசெம்பர் 11 ஆம் திகதிய 2049/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 1004)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 23.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) உறுப்புரையின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்டு 2017 திசெம்பர் 04 ஆம் திகதிய 2048/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 24.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— “இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 25.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 26.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.).

27.

சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

ஶ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

மொணறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

லசாலியன் சமூக கல்விச் சேவைகள் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

சர்வதேச பெண்கள் மற்றும் பிள்ளைகளின் உரிமைகள் பேரவை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

ஆலோகா சமூக சேவை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

த இன்ஸ்டிட்யுட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் அக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

ஶ்ரீ சாக்கியசிங்காராம விகாரஸ்த கார்யசாதக சங்விதான (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

இலங்கை கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

டாக்டர். எஸ்.எஸ். குணவர்தன சுதேச ஆயுர்வேத அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

மோகன் லங்கா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

சாயா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.